கம்பங்களையே உயர்த்தி பாதுகாப்பான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் ஏற்கெனவே நமது மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியையும் நிச்சயமாகக் கவனித்து அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

பேருந்து நிலையம்

***1332—டாக்டர் ச. சுந்தரராஜ்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.*

டாக்டர் ச. சுந்தரராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று கூறி உள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பரமக்குடி தொகுதி மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2011 செப்டம்பர் 5]

தொலைநோக்குப் பார்வையோடு இன்றைய சமுதாயம் மட்டுமல்ல, நாளைய சமுதாயத்திற்கும் திட்டம் தீட்டுகின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், பரமக்குடியில் அரசுக் கல்லூரியை வழங்கினார்கள். 230 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட மின் நிலையம் வழங்கினார்கள், வைகை ஆற்றில் ஒரு தரைப்பாலம் வழங்கினார்கள். இதுபோன்று எண்ணற்ற திட்டங்களைத் தீட்டிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி மீண்டும் வந்தவுடன் பரமக்குடி தொகுதிக்கு நல்ல பணிகள் கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். பரமக்குடி நகராட்சியின் மத்தியில் அமைந்திருக்கின்ற பரமக்குடி பேருந்து நிலையம், தேசிய நெடுஞ்சாலையின் அருகில் உள்ளது. ஆகவே, இட நெருக்கடி உள்ளது. பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப பேருந்து நிலையங்களை விரிவுபடுத்துகின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 1991 ஆம் ஆண்டு சென்னையில் கோயம்பேடு பேருந்து நிலையத்தை புறநகர் பேருந்து நிலையத்தை அமைத்தார்கள். அந்தப் பேருந்து நிலையம்கூட இன்றைய தினம் மத்தியில் அமைந்திருக்கின்றது. ஆகவே, மேற்கொண்டு பல்வேறு திட்டங்களைத் தீட்டுகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், பரமக்குடி நகரின் மத்தியில் இருக்கின்ற பேருந்து நிலையம் எந்த ஆண்டு விரிவுபடுத்தப்படும், எந்த அளவிற்கு விரைவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 இல் 2,715 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலத்தைக் கையகப்படுத்தி இந்தப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது 2011 ஆம் ஆண்டு பரமக்குடியினுடைய மக்கள்தொகை 95,547 என்று உயர்ந்திருக்கிறது. அதன் அடிப்படையிலே இன்று அந்தப் பரமக்குடி பேருந்து நிலையத்திற்கு மட்டும் 830 நடைகள் பேருந்துகள் வந்து சென்றுகொண்டிருக்கின்றன. அதிலே அந்த முனையத்திலிருந்து, பரமக்குடியிலிருந்து மட்டும் 310 நடைகளும், வழித்தடத்திலே வருகின்ற 520 நடைகளுமாக பேருந்துகள் வந்து

சென்றுகொண்டிருக்கின்றன. எனவே, இட நெரிசல் அதிகமாக உள்ள காரணத்தினால், புதியதாக எமனேஸ்வரம் என்ற இடத்தில் நிலம் பார்க்கப்பட்டு வருகிறது. அந்த நிலம் கையகப்படுத்தபட்ட உடனேயே, பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. சுந்தரராஜ் அவர்கள்.*

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடியில் ஒரு காலத்தில் ஆட்டுச் சந்தையும், மாட்டுச் சந்தையும் அமைப்பதற்காகப் பார்த்த நிலம், கிட்டத்தட்ட 10 ஏக்கர், பரமக்குடி பேருந்து நிலையம் அருகிலேயே உள்ளது. ஆகவே, மக்கள் பயன்பாடின்றிக் கிடக்கின்ற அந்த 10 ஏக்கர் இடத்தில், சந்தைப்பேட்டை இருக்கின்ற இடத்தில் நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைத்தால், மத்தியில் இருக்கின்ற பேருந்து நிலையம் மக்களுக்குச் சிறப்பாகப் பயன்படும். நிதிநிலையின் காரணமாகத்தான் இந்தப் பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படாமல் இருக்கின்றது. மானியத்துடன் கூடிய நிதியை ஒதுக்கீடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்தால் அந்த இடமே ஏதுவாக இருக்கும். ஆகவே, அந்த இடத்தைத் தேர்வு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—15

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இட நெரிசல் உள்ள பகுதியில் பேருந்து நிலையம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஒப்புதல் கொடுத்திருக்கிறார். மேலும் அருகிலிருக்கிற இடத்தைக் கையகப்படுத்தினாலும் போக்குவரத்து மிகவும் நெரிசலாக இருக்கிற காரணத்தினால்தான் நகரத்தினுடைய ஓரப் பகுதியில் அதாவது, வைகையினுடைய தெற்குப் பகுதியில் இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்காக நிலம் காணப்படுகிறது. அந்த நிலத்தைக் கையகப்படுத்தியவுடனே அங்கு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள்

TRUTH ALONE TRIUMPHS

2011 செப்டம்பர் 5]

வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14–வது சட்டமன்றப் பேரவைக்கு என்னை இரண்டாவது முறையாக அனுப்பி கூட்டத் தொடரில், இங்கு வந்து பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், எங்களது ஆட்சியில் துணை முதலமைச்சராக இருந்த எங்களது தளபதியார் அவர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக் கொண்டு, இந்தக் கூட்டத் தொடரில் துணைக் கேள்வி கேட்பதற்கு எனக்கு அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஒரு துணைக் கேள்வி. புதிதாக உருவாக்கப்பட்ட வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதியில் சூளகிரி பகுதியை நமது உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு மிக நன்றாகத் தெரியும். மிகப் பெரிய ஒரு டவுன் பஞ்சாயத்தாக இருக்கக்கூடிய அந்த சூளகிரியிலே பல்வேறு அலுவலகங்கள் இருக்கின்றன. ஒரு பெரிய மார்க்கெட் இருக்கிறது. பதிவுத் துறை அலுவலகம் இருக்கிறது. காவல் நிலையம் இருக்கிறது. மின்சார வாரிய அலுவலகம் இருக்கிறது. தாலுகா மருத்துவமனைக்கு இணையான பெரிய மருத்துவமனைகூட அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் நான்கு வழிச் சாலையையொட்டி இருக்கக்கூடிய அந்தப் பகுதியிலே, அந்த ஊருக்கு இதுவரையிலே பேருந்து நிலையம் கிடையாது. எங்களது தலைவர் கலைஞரின் கடந்த ஆட்சியிலே, புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான இடங்களெல்லாம் தேர்வு செய்யப்பட்டு கோப்புகள் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்தக் கோப்புகள் எல்லாம் அரசுக்கு அனுப்பப்பட்ட பிறகுதான் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. ஆகவே இன்றைக்கு எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர் உள்ளாட்சித் துறை அமைச்சராக வந்திருக்கிறார்கள். சூளகிரிக்கு ஒரு புதிய பேருந்து நிலையம் அமைத்துக் கொடுப்பாரா என்பதை நான் பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதில் ஒரு சிறு திருத்தம். அது டவுன் பஞ்சாயத்து அல்ல. ஊராட்சி. டவுன் பஞ்சாயத்திற்கும், ஊராட்சிக்கும் உள்ள வித்தியாசத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொன்னார்கள். கடந்த ஆட்சியில் இந்தப் பேருந்து நிலையம் அமைப்பது சம்பந்தமான கோப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன, ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது என்று கூறுகிறார். தயவுசெய்து எந்த ஆண்டு அந்தக் கோப்பு அனுப்பப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால், அவர்கள் ஆட்சியிலே நடக்காத ஒரு காரியத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உறுதியாக நிறைவேற்றுவோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், நீங்கள் எந்த ஆண்டு அந்தக் கோப்பு அரசுக்கு அனுப்பப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சரிடம் சொல்லுங்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி தொகுதிக்குட்பட்ட மேல்மலையனூர் ஒன்றியத்தில் பிரசித்திபெற்ற மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் அமைந்திருக்கிறது. அங்கு மாதந்தோறும் அமாவாசை தினத்தில் சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. ஆனால், இதுநாள் வரையில் அங்கு ஒரு பேருந்து நிலையம் இல்லை. கடந்த காலங்களில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, பல்வேறு காரணங்களால் அப்பணி நின்றுவிட்டது. எனவே, மேல்மலையனூர் ஊராட்சியில் மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி அம்மன் திருக்கோயில் அமைந்துள்ள இடத்தில் ஒரு பேருந்து நிலையம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2011 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஊர், உண்மையிலேயே ஒரு நல்ல திருத்தலம் உள்ள ஊர். தமிழகத்திலே இருந்து மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களிலேயிருந்து அந்தத் திருத்தலத்திற்கு மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே அவர்கள் கோரிய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்த இடத்திலே அப்பணியை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ். (குறுக்கீடு) திரு. அ. கணேஷ்குமார், மூலக் கேள்வி கேட்டவருக்குத்தான் துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு தரப்படும், அனுமதி தரப்படும். துணைக் கேள்வியில் ஒரு clarification–ம் மறுபடி ஒரு துணைக் கேள்வியையும் மூலக் கேள்வி கேட்பவர் கேட்கலாம். இது துணைக் கேள்வி. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என்னுடைய நன்னிலம் சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்குட்பட்ட வலங்கைமான் பேரூராட்சியில் இதுவரையில் பேருந்து நிலையம் இல்லை. வலங்கைமான் பேரூராட்சி என்பது ஒரு பழமைவாய்ந்த பேரூராட்சி. வலங்கைமான் பேரூராட்சியிலேதான் சீதாலதேவி என்கிற பாடைகட்டி மாரியம்மன் கோயில் விளங்கி வருகிறது. அந்தப் பாடைகட்டி மாரியம்மன் திருக்கோயிலுக்கு அந்தப் பகுதியிலேயிருக்கிற பல ஊர்களிலிருந்து, அம்மை வார்க்கிற நேரங்களிலே, வைசூரி வார்க்கிற நேரங்களில் எல்லாம் பல பேர் அங்கே வந்து செல்கிறார்கள். எனவே பிரசித்திபெற்ற பாடைகட்டி மாரியம்மன் கோயில் விளங்குகிற வலங்கைமான் பகுதிக்கு வணிக வளாகத்துடன்கூடிய பேருந்து நிலையத்தை அமைச்சர் அமைத்துத் தருவாரா என்பதனைத் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2011 செப்டம்பர் 5

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பேரூராட்சி, நீர்வளம் மிக்க ஒரு பகுதி. அந்தப் பகுதியில் நிறைய நிலங்கள் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களாக இருக்கின்றன. அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்டெடுத்துச் சொல்வார் என்றால் அந்தப் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கொண்டு வருவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலுள்ள ஆம்பூர் நகரம் மிகப் பெரிய நகரமாகும். இப்போது அங்கு தேசிய நெடுஞ்சாலை ஆறு வழிச் சாலையாக விரிவுபடுத்தப்படுகின்ற காரணத்தினால், தற்போது இருக்கின்ற பேருந்து நிலையம், மிகவும் குறுகிய, சிறிய பேருந்து நிலையமாக மாறுகின்ற வாய்ப்பு உள்ளது. ஆகவே, ஒரு விரிவுபடுத்தப்பட்ட, பெரிய பேருந்து நிலையம் அமைக்கப்படுமா என்பதைத் தாங்கள் வாயிலாக தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. காரணம், மற்ற நகரங்களில் புறவழிச்சாலைகள் இருக்கின்றன. ஆனால், ஆம்பூர் நகரத்தில் புறவழிச்சாலை இல்லை. எந்த வண்டிகள் வந்தாலும், ஒரே சாலையில் செல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது, அதுவும், தேசிய நெடுஞ்சாலையின் அருகாமையிலேயே பேருந்து நிலையம் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால், சிறிய பேருந்து நிலையம் என்று அவர் கூறுகிறார். அவருடைய சுயநலத்திற்காக சிறிய பேருந்து நிலையம் என்று சொல்லிவிட்டார். அது நல்ல பெரிய பேருந்து நிலையமாக இருக்கிறது. வருகின்ற*

பேருந்துகளுக்கு அந்தப் பேருந்து நிலையமே போதுமானது என்று நான் கருதுகிறேன். அப்படித் தேவைப்படுகின்றபட்சத்தில், ஆய்வு செய்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

திரு. ச. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய துணைக் கேள்வியைக் கேட்கின்றேன். வேடச்சந்தூர் தொகுதி, வடமதுரை பேரூராட்சியில் இதுவரை எந்தவிதமான பேருந்து நிலையங்களும் இல்லை. அங்கு ஒவ்வொரு 5 நிமிடங்களுக்கும் ஒரு பேருந்து வந்து செல்லக்கூடிய ஒரு நிலை உள்ளது. எல்லா பேருந்துகளும் ரோட்டிலேயே நின்று பயணிகளை இறக்கிவிட்டுச் செல்வதால், பல்வேறு நேரங்களிலே அங்கே விபத்துகள் ஏற்பட்டு, பல பிரச்சினைகள் உருவாகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வடமதுரை பேரூராட்சிக்கு ஒரு புதிய பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நகரத்திற்கு பேருந்து நிலையம் இல்லையென்று கூறியிருக்கிறார். பேருந்து நிலையங்கள் இல்லாததால், சாலைகளில் நிற்கக்கூடிய பேருந்துகளிலிருந்து இறக்கிவிடப்படும் பயணிகளுக்கு விபத்துகள் ஏற்படுவது இயற்கையாக நடந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைப்படி அதைத் தவிர்க்கின்ற வகையிலே, அந்த இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, நிலத்தைக் கையகப்படுத்தி அங்கு பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

77—

சொந்தக் கட்டடம்

*__1779—திரு. கா. தமிழரசன்:__

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, மதுரை கிழக்கு ஒன்றியம், வண்டியூரிலுள்ள கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை கிழக்கு தொகுதி, மதுரை கிழக்கு ஒன்றியம், வண்டியூரிலுள்ள கிளை நூலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட சர்வே எண் 118/7–ல் 2025 சதுர அடி காலிமனையை மாநகராட்சியிலிருந்து பத்திரப் பதிவு செய்து பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காலிமனை பெறப்பட்டதும், மேற்படி இடத்தில் 2 தளங்கள் கொண்ட கட்டடம் 2000 சதுர அடி பரப்பளவில், சுமார் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

திரு. கா. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர், குடும்பத்தின் குலவிளக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, உடல் மண்ணுக்கு,